தாயாய்..
தந்தையாய்...
தலைவராய்....

செ.திவான்

தாயாய் ..

தந்தையாய் ...

தலைவராய் ....

செ.திவான்

அரசியல் ஆய்வு மைய உறுப்பினர்

மறுமலர்ச்சி தி.மு.கழகம்

ரெகான் பதிப்பகம்,

106 F, 4A திருவனந்தபுரம் சாலை,

பாளையங்கோட்டை - 627 002.

ஆசிரியரின் 110-வது நூல்

வெளியீடு : 01.09.2018

தமிழர் தலைவர் வைகோ
பொது வாழ்வுப் பொன்விழா தின வெளியீடு

ஒளியச்சு : நான்சி கணினியகம்,
பாளையங்கோட்டை.

அச்சு : சிவசக்தி அச்சகம், சிவகாசி.

படையல்

பாதி வழியில் எளியேனை
பரிதவிக்கவிட்டுவிட்டு
பறந்து சென்றுவிட்ட
பாசமிகு உடன்பிறப்பு
ஜெ.பிரின்ஸ்க்கு . . .
1971-2018

வாழ்வதற்காக எழுதிடவில்லை.
எழுதுவதற்காகவே வாழ்கிறேன்.

செ.திவான்

தாயாய் .. தந்தையாய் ...
தலைவராய் ....

அடர்ந்த காடுகளில் செழித்து வளர்ந்து நிற்கும் மரங்களை எழுத்தாணியாகவும், கடல் நீரை 'மை'யாகவும் வானத்தை 'ஏடாகவும்' கொண்டு எழுதினாலும் தனது ஆசிரியரின் பெருமையினை எழுதி முடித்திட இயலாது என்று தெலுங்குக் கவிஞர் வேங்கண்ணா தனது குருவைப் பற்றி எழுதிய வைர வரிகள் தான் அடியேனுக்குத் தாயாய், தந்தையாய் தலைவராய்த் திகழ்ந்து வரும் தமிழர் தலைவர் வைகோ அவர்களின் பொதுவாழ்வுப் பொன் விழா மலருக்கு கட்டுரை எழுதும் போது நினைவிற்கு வருகிறது.

மாணவர் தி.மு.க. அமைப்பாளர்

1973 காலகட்டம்; நெல்லை மாவட்ட மாணவர் தி.மு.க. செயலாளர் வைகோ. பாளையங்கோட்டை, தூய யோவான் கல்லூரியில் இளங்கலை வரலாற்று மாணவனாகிய அடியேன் மாணவர் தி.மு.க.வில் உறுப்பினர்; தூய யோவான் கல்லூரி மாணவர் தி.மு.க. அமைப்பாளர். அப்போது அண்ணாச்சி வைகோ அவர்களுடன் தொடர்ந்த நட்பு 45 ஆண்டுகளுக்கு மேலாகத் தொடர்கிறது; உயிருள்ள வரை தொடரும். மாணவர் தி.மு.க. பாசறைக் கூட்டங்கள் பலப்பல. புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர். வேறு இயக்கம் கண்ட வேளை. தீவிர எம்.ஜி.ஆர். ரசிகனாயிருந்த எளியேனை டாக்டர் கலைஞர் பக்தனாக மாற்றியது அண்ணாச்சி வைகோ. 1975 ஜூன் 25 இரவில் நெருக்கடி நிலை அமுலுக்கு வந்தது.

இயக்கத்தைக் காப்பாற்றிட நாடெங்கும் மாணவர் இயக்கப் பாசறைகள் நடத்தப்பட்டன. அப்போது அடியேன் நெல்லை மாவட்ட மாணவர் தி.மு.க. இணைச் செயலாளர். அண்ணாச்சி வைகோ மாநில மாணவர் தி.மு.க. இணைச் செயலாளர்.

மாணவர் தி.மு.க. பாசறைக் கூட்டம்

இன்று திருநெல்வேலி சந்திப்பு மையப் பகுதியில் தச்சை மண்டல அலுவலகம் அமைந்துள்ள பகுதி. அன்று கலைஞர் கருணாநிதி திருமண மண்டபம். அந்த மண்டபத்தில் மாணவர் தி.மு.க. பாசறைக் கூட்டம். இயக்கத்தினைக் காப்பதற்காக இளைஞர்கள் இரத்தக் கையெழுத்திட்டனர். அவர்கள் விலாசம் முழுவதுமாக ஒரு நோட்டில் வாங்கப்பட்டது. தமிழகமெங்கும் கையெழுத்திட்ட மாணவர்களின் முகவரிப் பட்டியல் அதில் இருந்தது. அந்த நோட்டு காவல்துறை வசம் அகப்பட்டடால் பல நூறு மாணவர்களின் கதி மிகவும் மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கும்.

நெருக்கடி நிலைப் பிரகடனம்

1976 ஜனவரி 31 மாலையில் கழக ஆட்சி கலைக்கப்பட்டதாகச் செய்தி அறிவிக்கப்பட்டிருந்தது. முகவரிகள் இருந்த முழு ஏடு மேடை தளவாய் பயிற்சிப் பள்ளியில் அப்போது தலைவர் பொறுப்பிலிருந்த அண்ணாச்சி வைகோ அவர்கள் பொறுப்பில் இருந்தது. உடனே அங்கிருந்த அந்த நோட்டை அங்கு பணியாற்றிய தோழர் முத்துவை அழைத்து எரித்துப் பொசுக்கிய மதி நுட்பத்தை அண்ணாச்சி வைகோவிடம் அப்போதே கண்டவன்

அடியேன். கழகத்தின் ஆட்சி கலைக்கப்பட்டதற்குப் பின் நள்ளிரவில் நாடெங்கும் தலைவர்கள் கைது செய்யப்பட்டனர். பாளையங்கோட்டையில் முன்னாள் சபாநாயகர் அய்யா செல்லப்பாண்டியன் வீட்டிற்கு அருகே தனது வாழ்க்கைத் துணைவியாருடன் குடியிருந்து வந்த அண்ணாச்சி வைகோ திருநெல்வேலி மாவட்டத்திலே முதல் முதலாகக் கைது செய்யப்பட்டார். அப்போது போலீஸ் வாகனத்தில் அவர்கள் அழைத்துச் செல்லப்பட்ட போது அவர்கள் நெருக்கடி நிலைப்பிரகடனத்திற்கு எதிராக எழுப்பிய முழக்கங்களை (அரசியல் நாகரிகம் கருதி அந்த வரிகளை இங்கே குறிப்பிடவில்லை). இன்னும் என் செவிகளில் ரீங்காரமிட்டுக் கொண்டிருக்கிறது.

நெல்லை சங்கீத சபா நிகழ்ச்சி

தலைவர் கலைஞர் தலைமையில் இயக்கத்தினை வழி நடத்திச் சென்று, கட்டுக் கோப்புடன் காத்திட கழகக் கூட்டங்கள் அந்தகால கட்டங்களில் அரங்கங்களில் நடந்தது. அப்போது பல நிகழ்ச்சிகளில் பங்கேற்றுள்ளேன். குறிப்பாக தலைவர் கலைஞர் கலந்து கொண்ட நெல்லை சங்கீத சபா நிகழ்ச்சி என் வாழ்வில் மறக்க முடியாதது. அந்த நிகழ்ச்சியிலே தலைவர் கலைஞரை அருகேயிருந்து பார்த்தது இரண்டாவது முறை. 1968 தென்காசி இடைத்தேர்தலில் தேர்தல் பணியாற்றிட வந்த தலைவர் கலைஞரை பெரியபிள்ளை வலசை கிராமத்தில் அருகே இருந்து பார்த்தது முதல் முறை. சர்க்காரிய கமிஷன் வழக்கு நிதி தந்தது. இது 1976-இல் இதே மண்டபத்தில் அடியேனுக்கு தலைவர் வைகோ திருமண ஏற்பாடுகளைச் செய்து 1986 ஏப்ரல்

6-இல் தலைவர் கலைஞர் தலைமை தாங்கி அந்தத் திருமணத்தை நடத்தி வைப்பார் என்பது அப்போது இயற்கையும் இறைவனும் தானே அறிந்திருக்க முடியும்.

இராதாபுரம் உளிவீச்சு

1977 ஜனவரி 29 நெல்லை மாவட்ட நிகழ்ச்சி. ஜனவரி 30 குமரி மாவட்ட நிகழ்ச்சி. மீண்டும் ஜனவரி 31 நெல்லை மாவட்ட நிகழ்ச்சி. தலைவர் கலைஞர் அவர்கள் பயணமாகிறார்கள். ஐந்து அங்குல நீளமுள்ள உளி ஒன்றை வெறியன் வேகமாக வீசினான். அந்த உளி கலைஞரின் கார் கண்ணாடியைத் துளைத்துக் கொண்டு நெற்றியை நோக்கி வந்தது. கலைஞர் கண் இமைக்கும் நேரத்தில் அனிச்சைச் செயலாகக் குனிந்து கொண்டார். பின்னால் இருந்த கண்ணாடியிலே மோதி கலைஞர் உடல் முழுவதும் கண்ணாடிச் சிதறல்கள். தலைவர் கலைஞரின் மூக்குக் கண்ணாடியும் கீழே விழுந்து விட்டது. அதிர்ச்சி அடைந்த அண்ணாச்சி வைகோ காரில் இருந்து இறங்கிச் சென்று வெறியனைப் பிடித்து அடித்து துவைத்தது அடியேன் பார்த்தது.

மாநிலங்களவைத் தேர்தலில்

நெருக்கடி நிலை நொறுங்கிப் போய் தேர்தல்கள் அறிவிக்கப்பட்டது. பாளையங்கோட்டை சிறையிலிருந்து இடையிலேயே சேலம் ஜில்லா சிறைக்கு மாற்றப்பட்ட அண்ணாச்சி வைகோ மிசாவில் முதல் ஆளாகச் சென்று கடைசி ஆளாக வெளியிலே வந்தார்கள். கழகம் தேர்தலில் களம் கண்டு 48 இடங்களைப் பெற்றிருந்தது. மாநிலங்களவைத் தேர்தலில்

கழகத்தின் சார்பில் ஒருவர் வெற்றி பெற்றுச் செல்ல இயலும். அப்போது மாணவர் அமைப்புக்கள் பலவற்றின் சார்பில் கடிதங்கள் எழுதிட காரணமானேன். பின் அக்கடிதங்களைக் கலைஞருக்கு அனுப்பி வைத்தேன். அண்ணாச்சி வைகோ அவர்களை மாநிலங்களவை உறுப்பினர் ஆக்கிடுங்கள் என்று நாடெங்குமிருந்து கடிதங்கள் சென்றது. அதில் சிறு துளி எளியேனின் பங்களிப்பு. அண்ணாச்சி வைகோ மீது தாயினும் மேலாக அன்பு காட்டிய தலைவர் கலைஞர் 13.03.1978 அன்று மாநிலங்களவை உறுப்பினர்கள் வேட்பு மனுவை முன்மொழிந்தார். பொதுச் செயலாளர் அண்ணன் பேராசிரியர் வழிமொழிந்தார். அண்ணாச்சி வைகோ நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர் ஆனார்.

இந்தி எதிர்ப்பு மாநில மாநாடு

1978 டிசம்பர் 23, 24 திருச்சியில் கழகத்தின் இந்தி எதிர்ப்பு மாநில மாநாடு; தலைவர் புலவர் கோவிந்தன்; மாநாட்டுத் திறப்பாளர் அண்ணாச்சி வைகோ. வரவேற்புக் குழுத் தலைவர் அண்ணன் அன்பில். அந்த மாநாட்டின் கலந்து கொள்ள தனியார் பஸ் ஒன்றில் திருச்சி சென்று வந்தோம். அந்த நிகழ்வுகள் நெஞ்சில் நிழலாடுகின்றது.

1977 சட்ட மன்றத் தேர்தலில் திருச்சிக்குத் தெற்கே தி.மு.கழகம் வெற்றி பெற்றது. அண்ணாச்சி வைகோவின் சொந்தத் தொகுதியான சங்கரன்கோவிலில்தான். அந்தத் தேர்தலின் போது சிறிய அளவில் தேர்தல் பணியாற்றிய அடியேனை த.மு. ரோட்டில் உள்ள திருநெல்வேலி சரஸ்வதி தங்கும் விடுதியில் ‘அறை எண் 52 எனது

அலுவலகமாக ஆக்கியுள்ளேன். திவான் நீங்கள் இங்கிருந்து கழகப்பணி ஆற்றிட வேண்டும். பொதுப் பணிகளையும் நிறைவேற்ற வேண்டும்' என்று அண்ணாச்சி வைகோ கேட்டுக் கொண்டார்கள். 1979 துவக்கத்திலிருந்து அந்த அலுவலகம் இயங்குகிறது. இன்று நெல்லை புறநகர் மாவட்ட ம.தி.மு.க. அலுவலகமாக மாமா திரு. தி.மு.இராசேந்திரன் அந்த அலுவலகத்தைத் தொடர்ந்து நடத்தி வருகிறார்.

யமுனைக் கரையில்

அண்ணாச்சி வைகோவுடன் டெல்லி செல்வேன். அங்கு நம்பர் 2, மீனாபாக் இல்லம், காலையில் பத்துப் பதினைந்து ஆங்கில ஏடுகள் ஆகியவைகளை வாசிப்பார். அதில் அடையாளமிடுவார். அன்றுள்ள முக்கியப் பிரச்சினைகளைத் தனியாக கத்தரித்து தனித்தனி கோப்புகளாக்குவேன். வேக வேகமாகப் படிப்பார். பாராளுமன்றத்திற்குக் காலையில் அவசரமாகச் செல்வதால் வாடகைக் காரிலே சென்றுவிடுவார். மதியம் உணவிற்கு வர மாட்டார். இருட்டும் வேளையிலே பாராளுமன்றக் கட்டிடத்திலே இருந்து நடந்தே வருவர். நள்ளிரவு வரை படித்துக் கொண்டே இருப்பார். மறுநாள் வழக்கம் போல முன் சொன்ன பணிகள் தொடரும். அண்ணாச்சி வைகோவின் துணைவியார் கண்ணியத்திற்குரிய அக்காள் திருமதி ரேணுகாதேவி அவர்களும், சிறுவயது மகள் கண்ணகியும் டில்லிக்கு வருவார்கள்.

எப்போதாவது மூத்தமகள் ராஜலெட்சுமியும் மகனார் துரை வையாபுரியும் டில்லிக்கு வருவார்கள். இவர்கள் இருவரையும் இரு கரங்களில் பிடித்துக் கொண்டு அண்ணாச்சி வைகோவின் இளையமகள்

கண்ணகியை தோளிலே சுமந்து கொண்டு ராஷ்டிரபதிபவன் ரோட்டிலே நடந்து சென்ற நினைவுகள் நெஞ்சிலாடுகின்றன. (இப்போது அந்தப் பகுதியில் சாமானியமாகச் சென்றுவிட முடியாது)

கழகத் தோழர்களுக்கு அன்பு உபசரிப்பு

புது தில்லியில் பணிச் சிரமமான நிலையிலிருந்தாலும் தமிழகத்திலிருந்து வரும் அரசியல் தலைவர்கள், கழகத் தோழர்கள் அவர்களை அன்போடு உபசரித்து வீட்டிலேயே விருந்தளித்து அனுப்புவார் அண்ணாச்சி வைகோ.

கழகத் தோழர்கள் இல்லத்தில் திருமணமா, அல்லது துக்கமா எதுவானாலும் அண்ணாச்சி வைகோ ஓடோடிச் சென்று பார்ப்பார். நலம் விசாரிப்பார். ஆறுதல் கூறுவார். தேவைப்பட்டால் உதவிகளும் புரிவார். இப்படிப் பல்லாயிரம் சம்பவங்களை அடியேனால் சொல்ல முடியும்.

மூப்பனார் அய்யா தந்த சூட்கேஸ்

ஒரு நாள் விமானத்தில் வரும்போது அய்யா ஜி.கே.மூப்பனார் அவர்கள் கரங்களில் கொண்டு வந்த சூட்கேசைப் பார்த்து பெட்டி நன்றாக இருக்கிறதே என்று அண்ணாச்சி வைகோ சொல்லியிருக்கிறார்கள். மதிய வேளை; 2 மீனாபாக் வீட்டில் அழைப்பொலி ஒலிக்கிறது. ஒருவர் ஒரு சூட்கேசுடன் நின்று கொண்டிருக்கிறார். என்ன என்றேன். வைகோ அவர்களிடம். மூப்பனார் அய்யா கொடுத்துவிட்டு வரச் சொன்னார்கள் என்றார். இதில் உள்ள லாக்கர் நம்பர் தி.மு.க. என்ற எழுத்துக்கு உரிய எண்கள் என்ற

தகவலையும் சொல்லச் சொன்னார். இப்படி டெல்லியில் எத்தனையோ நிகழ்வுகள்.

சிறையேகிய தோழர்களுக்கு கடிதங்கள்

கழகத்தின் போராட்ட அறிவிப்புக்கள்; சிறை செல்வார்; கணக்கற்ற முறையில்; சிறையில் இருக்கும் கழகத் தோழர்கள் முகவரியை எழுதி வாங்குவேன். விடுதலையாகி வெளியே வந்ததும் சிறையேகிய அனைத்துக் கழகத் தோழர்களுக்கும் அண்ணாச்சி வைகோ தனது கரத்தாலே எழுதிய கடிதங்களை அனுப்பி வைப்பார். ஆயிரக்கணக்கில் அந்தக் கடித வாசகங்களை Inland letter-இல் உள்நாட்டுக் கடிதம் எழுதும் எளியேனின் பணியின் போது அண்ணாச்சி அவர்களின் துணைவியார் கண்ணியத்திற்குரிய அக்காள் அவர்களும் உடனிருந்து எழுதியது சத்திய வரலாறு.

கலைஞரின் மேல் அளவு கடந்த பாசம்

நெல்லை சந்திப்பு சரஸ்வதி லாட்ஜ் நாடாளுமன்ற உறுப்பினர் அலுவலகம், அத்தோடு மாவட்ட தி.மு.க. அலுவலகமுமாயிற்று. தேர்தல் காலங்களில் இரவு 1 மணிக்கு பிரச்சாரத்தை நிறைவு செய்து வருவார். காத்திருக்கும் கழக முன்னணியினரோடு நள்ளிரவில் ஆலோசனைகள் செய்துவிட்டு அனுப்பி வைப்பார். இரவு 3 மணியாகும். அறையிலிருக்கும் ஒரு சிறிய கட்டிலில் படுத்திருப்பார். அருகில் பேப்பரை விரித்து அடியேன் படுத்திருப்பேன். காலை 4 மணியாகும். காலைச் செய்தித் தாள் வாங்கி வா என்பார்கள். ஓடிச் சென்று வாங்கி வருவேன். அத்தோடு அவர்கள் குளிப்பதற்கு ஒரு வாளியில் வெந்நீரும் தயாராகி

எடுத்து வருவேன். பல் துலக்கிக் கொண்டே பல்வேறு கட்டளைகளைச் செய்ய வேண்டிய பணிகளைச் சொல்வார். வரிசையாக வேகமாகச் சொல்லச் சொல்ல எழுதுவேன். மறுநாள் இரவு வருவதற்குள் அந்தப் பணிகள் நிறைவடைந்திருக்கும். கட்சிப் பணிகளைக் கவனத்துடன் காரியமாற்றுவார். தலைவர் கலைஞரின் மேல் அளவு கடந்த பாசம்; தனது உயிருக்கு மேல் வைத்துக் கொண்டாடுவார். யாராவது தலைவர் கலைஞரை ஒருமையில் பேசினால் அவ்வளவுதான்? கோபம் பொங்கி வரும். தாங்கிக் கொள்ள மாட்டார்.

முதன் முதலில் **Flood Light**

தலைவர் கலைஞர் நிகழ்ச்சி நெல்லையில் என்றால் இரவு முழுவதும் தூங்க மாட்டார். நெல்லை சாப்டர் பள்ளி மைதானத்தில் முதன் முதலில் Flood Light நிழல் விழாதபடி பல திசைகளில் இருந்து வீசப்படும் பேரொளிப் பெருக்கான விளக்குகளைத் தலைவர் கலைஞருக்காக அமைத்தவர் அண்ணாச்சி வைகோ.

நாடெங்கும் சுற்றி கழகத் தலைவர் கலைஞரின் பாதுகாவலுக்கென்று தொண்டர் படையை அமைத்து, திருநெல்வேலியில் ஏழெட்டு மணி நேரம் ஊர்வலம் நடத்தி தலைவர் கலைஞர் அவர்களே முரசொலி உடன் பிறப்புக் கழகத்தில் ‘நெஞ்சினிக்கும் நெல்லை’ என்று அண்ணாச்சி வைகோவைப் பாராட்டி எழுதியதை மறக்க முடியுமா? கழகம் அறிவிக்கும் போராட்டங்கள்; போலீசார் எப்படியும் முன்கூட்டியே கைது செய்யத் திட்டமிடுவர். குளத்தூர் ஹவுஸில் அண்ணாச்சி குட்டியின் வீட்டில் தங்கியிருந்து காலையில் அங்கிருந்து கிளம்பி மேலப்பாளையம் வழியாக வந்து

கலெக்டர் அலுவலகம் பின்புறம் உடைந்து கிடந்த பாதை வழியாக உள்ளே வந்து, கலெக்டர் அலுவலகத்தில் முறையாக மறியல் செய்து வெற்றி பெற்றவர் அண்ணாச்சி வைகோ. அப்போது காவல்துறை அதிகாரி, அவர்களை தோளில் கை வைத்துத் தள்ள அதனை உரிமைப் பிரச்சினையாக்கி அவர் ராஜ்யசபா வரை அலைந்து இறுதியில் சமாதானமாகப் போனதும் அண்ணாச்சி வைகோவின் விடா முயற்சி. அருகிருந்து அடியேன் கண்டது.

திண்டுக்கல் ரயில் நிலையத்தில்

திண்டுக்கல் ரயில் நிலையத்தில் அமைச்சர் ஒருவரின் அடாத செயல் விடிய விடிய தலைவரின் ரயில் பெட்டியில் பாதுகாத்துச் சென்ற அண்ணாச்சி தலைவர் வைகோ கலைஞர் மீது கொண்ட பாசத்தை எண்ணி எண்ணி வியந்து போயிருக்கிறேன்.

அடியேன் தயாரித்த ஏடு

அண்ணாச்சி வைகோ கழகத்தின் தேர்தல் பணிச் செயலாளர். 1986 உள்ளாட்சித் தேர்தலின் கழகம் பெருவாரியான இடங்களில் அப்போது வென்றது. அதன் பின் 1989 பொதுத் தேர்தல். தேர்தல் பணிச் செயலாளரான அண்ணாச்சி வைகோவிற்கு கழகம் தேர்தல் களம் கண்ட அத்தனை விவரங்கள் அடங்கிய பெரிய ஏடு ஒன்றைத் தயாரித்துக் கொடுத்திருந்தேன். அதைக் கண்ணுற்ற தலைவர் கலைஞர் அந்த நோட்டை அவர்களே வாங்கி வைத்துக் கொண்டார்கள். பல நாட்கள் அந்த ஏடு அவர்களது கரங்களில் இருந்தது. அடியேன் செய்த பாக்கியம் அது (பின்னர் உடனே அது போன்ற ஒரு நோட்டை

அண்ணாச்சி வைகோ அவர்களுக்கும் தயார் செய்து கொடுத்தேன்)

கலைஞரின் வலது பக்கத்தில் அண்ணாச்சி வைகோ

அந்தத் தேர்தல் கால கட்டத்தில் வேட்பாளர் நேர்காணல் அண்ணா அறிவாலயத்தில்; தலைவர் கலைஞரின் வலது பக்கத்தில் அண்ணாச்சி வைகோ இடது பக்கத்தில் பேராசிரியர். அந்த அறைக்குள் செல்லும் வாயிலில் அடியேன் தலைவர் கலைஞரின் நம்பிக்கையை அந்த அளவிற்குப் பெற்றவன் அடியேன். வேட்பாளர் நேர்காணல் நடைபெறும். யாருக்கு எந்தத் தொகுதி என்பது அடியேனுக்கும் இலேசாகத் தெரியும். ஆனால் தலைவர் கலைஞர் என் மீது கொண்ட நம்பிக்கையைக் காப்பாற்றியவன் அடியேன். இது அண்ணாச்சி வைகோ அவர்களும் அறிவார்கள்.

தொண்டன் மீது கொண்ட தூய பாசம்

ஒருநாள் சென்னை சி.ஐ.டி. காலனி இல்லத்திலிருந்து தலைவர் கலைஞரின் கார் கிளம்புகிறது. முன் இருக்கையில் தலைவர் கலைஞர். பின் இருக்கையில் அண்ணாச்சி வைகோ, தலைவரின் உதவியாளர் திரு.சண்முகநாதன், அடியேன்; அந்த இல்லத்தின் விலக்கில் கார் திரும்பும் வேளை. ஒரு பைலை வீட்டிலே வைத்துவிட்ட நிலையில் அதை எடுத்துவர காரில் இருந்து என்னை இறங்கச் சொல்ல நான் காரில் இருந்து இறங்கி வீட்டிற்குச் சென்று ஹாலிங் பெல்லை அழுத்த தற்போது நாடாளுமன்ற உறுப்பினர் சகோதரி கனிமொழி கதவைத் திறந்து பார்த்திட, அதற்குள் தலைவர் கலைஞரின் கார் பின்னோக்கி வந்தது. அந்தப் பைலையும் வாங்கிக்

கொண்டு அடியேனையும் திரும்பவும் காரில் ஏற்றிச் சென்ற நிகழ்வினை எப்படி மறக்க முடியும்? அண்ணாச்சி வைகோவின் தொண்டனான எளியேன் மீதே இவ்வளவு அன்பினைக் காட்டிய தலைவர் கலைஞர், அண்ணாச்சி வைகோ மீது எவ்வளவு அன்பு காட்டியிருப்பார் என்பதனை நீங்களே உணர்ந்து கொள்ளுங்கள்.

கழுகு வீழ்ந்தது

TNR 2455 அம்பாசிடர் கார் டிரைவர் மாமா மணி ஓட்டி வருகிறார். மதுரை விமான நிலையத்திலிருந்து இறங்கி நெல்லையை நோக்கிய பயணம். காரின் பின் சீட்டில் அண்ணாச்சி வைகோ படுத்திருந்தார். இலேசாகக் கண்ணையர்ந்திருந்த நிலையில் டமார் என்ற சப்தம். அதுகேட்டு அவர்கள் திடீரென எழுந்த போது அவர்கள் சொன்னது நினைவிற்கு வருகிறது. ‘மரத்திலே புறாக்கூடு. அதிலே புறாக்கள். அதனை கொத்தித் தின்றிட கழுகு ஒன்று வருகிறது. விழித்து விட்டேன்’ என்றார். அப்போது என்னப்பா மணி என்னாச்சு? என்ன சப்தம்? என்றார். அண்ணாச்சி பெரிய கழுகு வேகமாகப் பறந்து வந்தது; வந்த வேகத்தில் நமது காரின் கண்ணாடியை உடைத்துக் கொண்டு உள்ளே வந்து விடுமோ என்று பயந்தேன். நல்லவேளை கார் கேரியல்ல அடிபட்டு கீழே செத்துக் கிடக்கிறது கழுகு பாருங்கள் என்றார். அண்ணாச்சி வைகோ உடனே ‘ஈழத்திலே தம்பி பிரபாகரன் தப்பிச்சுருவாருப்பா’ என்றார்கள்.

அமெரிக்கப் பயணம்

அமெரிக்காவிற்கு 2002 சூலை 1 இல்

அண்ணாச்சி வைகோ பயணமான போது தென் ஆப்பிரிக்கா விடுதலை வீரன் நெல்சன் மண்டேலா வரலாற்றைப் படித்துக் கொண்டே செல்கிறார். இலேசாக கண்ணயர்ந்த நிலை. சிறைக்குள் அடைபட்டது. புத்தகக் குவியல், தனிமையில் இருப்பது, சிறை அதிகாரிகள் வருவது போன்ற காட்சிகள். கண் விழித்துப் பார்க்கிறார்.

பொடா சிறைவாசம்

தமிழக முதலமைச்சர் 'பொடா'வில் கைது செய்ய இருக்கிறார் என்ற தகவல் வருகிறது. 2002 ஆகஸ்ட் 15 தேதி புறப்படுவதற்குத் திட்டம். ஆனால் ஆகஸ்ட் 11 தேதியே திரும்பினார். தமிழக அரசால் கைது செய்யப்பட்டார். 19 மாத கால பொடா சிறைவாசம் வேலூரில் அந்த நாட்களை எப்படி மறக்க முடியும்?

விஞ்ஞானபூர்வமாக விளக்கம் கிடைக்கவேயில்லை

இராதாபுரத்தில் உளிவீச்சு; கயத்தாற்றிலே கழுகு செத்து விழுந்தது; அமெரிக்கப் பயணத்தின் போது சிறையில் இருப்பது போன்ற காட்சி. இந்தச் செயல்களுக்கு விஞ்ஞானபூர்வமாக இதுவரை விளக்கம் கிடைக்கவேயில்லை என்று அண்ணாச்சி வைகோ அவர்கள் அடிக்கடி என்னிடம் கூறுவார்கள்.

அன்னை மாரியம்மாளிடம் ஆசி

இரண்டு சம்பவங்கள் அடியேன் சொல்லவில்லை என்றால் கடமையில் தவறியவன் ஆவேன். 1989 பிப்ரவரி 2; 'ஈழத்திற்கு செல்ல முடிவெடுத்து விட்டேன்; உயிருக்கு ஆபத்து வந்தாலும் கவலையில்லை. இதனை யாரிடமும் சொல்ல மாட்டீர்கள்; உங்களை

நான் அறிவேன்’ என்றார் அண்ணாச்சி வைகோ. கலிங்கப்பட்டி சென்றார். அன்னை மாரியம்மாளிடம் ஆசி பெற்றார். ஐரோப்பா செல்வதாக அவர்களிடம் சொன்னார்.

மூத்த அக்காள் ராஜலெட்சுமியிடம் ஆசி

பிப்ரவரி 3 காரில் வுசே 2455 மதுரை பயணம். டிரைவர் மணி வண்டியினை ஓட்டி வருகிறார். திருமங்கலம் அருகே கார் பழுது. சரி செய்திட கால தாமதம். அண்ணாச்சி வைகோ 3 அல்லது 4 கி.மீட்டர் தூரம் நடந்தே சென்றார்கள். நான் பின்னால் ஓடிப்போனேன். காரை சரி செய்து கொண்டு மணி வந்தார். திருச்சியில் கவிதா ஹோட்டலில் அண்ணாச்சியின் மூத்த அக்காள் கண்ணியத்திற்குரிய ராஜலெட்சுமியிடம் அவர்களது துணைவர் ஜான் சங்கரப்பனும் இருந்தார்கள். அவர்களிடம் சொல்லிவிட்டு திருச்சியிலிருந்து ரயிலேறத் திட்டம்.

கலைஞர் முதல்வரான மகிழ்ச்சியிலே

விறாலி மலை தாண்டியதும் காரில் பிரேக் இல்லை. அத்தோடு கார் கண்ணாடியில் மழை நீரை ஒழுங்கு செய்யும் வைப்பர் பழுதாயிற்று. இத்தனை சிரமங்களைத் தாண்டி திருச்சி சென்றோம். திட்டமிட்டபடி ஆசி பெற்றார். ரயில் பயணம் தொடர்ந்தது. 1989 பிப்ரவரி 5 குமரன் சில்க்ஸ் கடைக்கு அண்ணாச்சி வைகோ தனது பிள்ளைகளையும், துணைவியாரையும் அழைத்துச் சென்றார். பட்டு ஆடைகள் எடுத்துத் தந்தார். எதற்கு என்றார்கள். தி.மு.கழகம் ஆட்சிக்கு வந்திருக்கிறதல்லவா? அண்ணன் கலைஞர்

1976 – நெல்லை சங்கீத சபாவில்



1980– நாடாளுமன்றத் தேர்தல் வெற்றியின் போது



1980– நாடாளுமன்றத் தேர்தல் வெற்றிக்குப் பின்

திருச்சி ம.தி.மு.க. மாநாட்டில்

தமிழர் தலைவர் **வைகோ** அவர்களுடன்





தி.மு.கழகத் தலைவர்
தளபதி ஸ்டாலின் அவர்களுடன்





முதல்வராயிருக்கிறார் அல்லவா, அந்த மகிழ்ச்சி என்றார். மறுநாள் காலையில் அரபு நாடுகளுக்குப் பயணம் செல்வதாகச் சொல்லிவிட்டு வீட்டிலிருந்து புறப்பட்டுச் சென்றோம்.

கண்களில் நீர் பொங்கிப் பெருகியது

பிப்ரவரி 6 காலையில் கிளம்பினோம். அண்ணாச்சி வைகோவின் உடல்நிலை சீராக இல்லை. வயிற்றுக் கோளாறு. நாலைந்து இடங்களில் காரை நிறுத்தினோம். அவர்கள் இயற்கை உபாதைகளைக் கழித்து வந்தார்கள். பின் வந்த காரைத் திருப்பி அனுப்பினோம். பாதி வழியில் விடுதலைப் புலிகளின் மாருதி கார் வந்தது. அதில் ஏறி பயணித்தோம். அப்போது தலைவர் கலைஞருக்குக் கடிதம் எழுதிட வாசகங்களைச் சொல்லிக் கொண்டே வந்தார். அதனை நான் எழுதும் போது எளியேன் கண்களில் நீர் பொங்கிப் பெருகியது.

‘மானம் அவன் கேட்ட தாலாட்டு
மரணம் அவன் ஆடிய விளையாட்டு’

‘மானம் அவன் கேட்ட தாலாட்டு; மரணம் அவன் ஆடிய விளையாட்டு’ என்ற தலைப்பில் கலைஞரின் வார்த்தைகளிலேயே கடிதம் துவங்கியது. சாதாரண முதலமைச்சராக உங்களைக் கருதவில்லை. உலகம் போற்றும் தமிழினத் தலைவராகக் கருதுகிறேன். அண்ணனே எந்த நிலை வந்தாலும், தலைவர் கலைஞர் அவர்களே என் உயிரைத் தருவேனே தவிர என்னால் கழகத்திற்கு எந்தப் பாதிப்பும் வராத வகையில் நடந்து கொள்வேன் என்று அந்தக் கடிதம் முடியும். அந்தக் கடிதத்தை திரும்ப அவர்களே

எழுதினார்கள். அதனைத் தான் பிப்ரவரி 7-இல் தலைவர் கலைஞர் வீட்டில் குட்டி அண்ணாச்சி கொண்டு போய் கொடுத்தார்கள்.

புலிகள் உண்டியலில் காணிக்கை

இரவு பட்டுக்கோட்டை - சூரக்கோட்டை காளியம்மன் கோவில் - புலிகள் உண்டியலில் காணிக்கை செலுத்தினார்கள். இனி நீங்கள் வீட்டுக்குப் போங்கள் என்றார் அண்ணாச்சி வைகோ. உயிர் பிழைத்து வருவாரோ? வர மாட்டாரோ? என்ற ஏக்கத்துடன் கவலையோடு வீடு வந்து சேர்ந்தேன். காய்ச்சலும் தொற்றிக் கொண்டது.

எனக்கு உடல்நலம் குறைந்தாலும் என் வீட்டில் யாருக்கேனும் எந்தப் பாதிப்பு வந்தாலும் அத்தனையையும் சரி செய்திட, எங்களை மருத்துவமனைகளில் அனுமதித்திட, குணமாக்கிட அண்ணாச்சி வைகோ செய்த உதவிகள் அநேகம் அநேகம்.

திவான் எனக்கு கிடைத்த பெரும்பேறு

அண்ணாச்சி வைகோ அவர்கள் 'திவான் எனக்கு கிடைத்த பெரும் பேறு' என்று அடிக்கடி சொல்வார்கள்.

'செந்தமிழ்க் காவியங்களை, சீரிளமை என்றும் மாறா கன்னித் தமிழ் பனுவல்களை செல்லரித்த ஏடுகளில் இருந்து தன் சிந்தையின் திறத்தால் சேகரித்து தமிழ் உலகுக்குத் தொண்டு செய்த தமிழ்த் தாத்தா உவேசா பயணித்த ஆராய்ச்சிப் பாதையில் பயணிக்கும் திவான்' எனப் போற்றுவார். கூச்ச சுபாவம்

கொண்ட அடியேன் பின்னால் நின்று கொண்டிருந்த போதும் எளியேனை முன்னிறுத்திப் பேசி பெருமைப்படுத்துவார் அண்ணாச்சி வைகோ.

உண்மை, வாய்மை, நேர்மை, எளிமை ஆகியவற்றின் வடிவமாக தெற்குச் சீமையில் எனக்குக் கிடைத்த கருவூலம் என்பார். அடியேன் இன்று 110 நூல்களுக்கு மேல் எழுதி வெளியிட்டிருக்கிறேன் என்றால் அண்ணாச்சி வைகோ காட்டிய அன்பும் அரவணைப்பும் காரணம் என்றால் அது மிகையாகாது.

அண்ணாச்சிக்கு நடந்த அறுவை சிகிச்சை

என் உடல் நிலையைக் கவனித்திட எத்தனையோ முறை உதவிய அண்ணாச்சி வைகோவிற்கு நான் சிகிச்சை பெற்ற காது, மூக்கு, தொண்டை நிபுணர் டாக்டர் கே.கே.ராமலிங்கம் மருத்துவமனையில் 1993 செப்டம்பர் 18-இல் காலையில் அறுவை சிகிச்சை. அதுவும் எங்கு தெரியுமா? தொண்டைக் குழிக்குள்; பேச்சு வரும் இடத்தில் சிறு கட்டி. ஒரு வேளை அது புற்று நோய்க் கட்டியாக இருக்கலாம் என்று டாக்டர் ஐயப்பட்டுச் சொன்னார்.

அறுவை சிகிச்சைக்குச் செல்லும் முன் அண்ணாச்சி வைகோவிற்கு மயக்க மருந்து தரப்பட்டது. 18 எண் வரையில் எண்ணிக் கொண்டே வந்தார். பின் நினைவிழந்தார். அறுவை சிகிச்சை முடிந்தது. அதிகாலையில் அருகே உள்ள பள்ளிவாசலுக்குச் சென்று இறைவனை வழிபட்டுத் திரும்பினேன். ஆபத்து ஏதுமில்லை. மருத்துவர் அறிவித்தார். அரைகுறை மயக்கம். அண்ணாச்சி வைகோ புலம்புகிறார். அருகிலிருந்தவன் அடியேன் ஒருவன்.

நான் ஒரு குற்றமும் செய்யலியே.
எந்தத் தவறும் செய்யலியே

'நான் ஒரு குற்றமும் செய்யலியே.

எந்தத் தவறும் செய்யலியே.

மனசிலே தெய்வமாக அல்லவா கலைஞரைக் கருதினேன். நினைக்கிறேன்.

என்னை ஏன் கஷ்டப்படுத்துகிறீர்கள்'

என்று அந்த அரைகுறை மயக்கத்தில் அண்ணாச்சி வைகோ அரற்றியதைக் கண்டு அங்கிருந்த டாக்டர் கே.கே.ராமலிங்கம் கண் கலங்கிப் போனார். தலைவர் கலைஞர் மீது அண்ணாச்சி வைகோ கொண்ட அன்பு எவராலும் அளவிட முடியாதது.

இப்படி எத்தனையோ வரலாற்று நிகழ்வுகள்; நான் கண்ட 'வைகோ' என்ற தனி நூலில் இன்னும் விரிவாகவே வரலாற்றை இயற்கை அனுமதித்தால் தருவேன்.

வாழ்க தலைவர் வைகோ
வளர்க அவரது புகழ்.
பொருநை மணலினும் பன்னெடுங்காலம் அவர்களது
பொது வாழ்வுத் தொண்டு தொடர இயற்கை அருள்க!